

டச்சுறோட், முளாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி.மீனாட்சிப்பிள்ளை சேனாதிராஜா

அவர்கள் இறைவன் திருவடி அடைந்தமை குறித்து வெளியிடப் பெற்ற

# நினைவு மலர்

06.05.2006

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

பதினொரு பேருடனோர் பதிவிரதையாகவந்து
அதியுயர் பண்புகளை அவனியிலே பெற்றுயர்ந்து
மதிநிறைந்த மணாளனை மாண்புடனே தேர்ந்தெடுத்து
விதிபோற்றும் இல்வாழ்வு வாழ்ந்திருந்த அன்பு
நதிபோற்றும் பண்புடையார் மீனாட்சிப்பிள்ளையினி
கதியிறைவன் கழலென்றோ கண்டூடி மறைந்ததனால்
துதித்தவர் பாதமதில் தூவிடவே இம்மலரெடுத்து
பதித்தின்று தந்தோம்நாம் சமற்பணமாய் ஏற்றிடுவீர்!

**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்**

உ

மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்து மறைந்த அன்னை

அமரர்

# திருமதி.மீனாட்சிப்பிள்ளை சேனாதிராஜா

அவர்கள்

தோற்றம்
18
09
1926



மறைவு
06
04
2006

ஆண்டுக்கு ஒருமுறை சாத்மிக வடிவுடனே
வந்து போகும் அம்மையாரை வரவேற்று வணங்குவதற்கு

## திதி வெண்பா

பார்த்திப வருடத்து பங்குனித் திங்களுயர்
பூர்வபட்ச நவமியதாம் புகழோடு வாழ்ந்த அன்னை
ஊர்போற்றும் உத்தமியார் மீனாட்சிப்பிள்ளையவர்
வார்சடையான் அடிசேர்ந்த திதியென்றே வணங்கித் துதி!

உ

சண்டிலிப்பாயூர் கல்வளை

# அமரர் திரு.வேலுப்பிள்ளை சேனாதிராஜா

அவர்கள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டார்

மலர்வு
31
10
1924



உதிர்வு
28
03
2002

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிளை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

## திருவாசகம்

அன்றே யென்றன் ஆவியும் உடலும்
உடமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தானை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனில் உலர்முன் வருகென வரைப்பார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருக வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடி சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



அமரர்

# திருமதி மீனாட்சிப்பிள்ளை சேனாதிராஜா

அவர்களின்

# வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

**மீனாட்சிப் பிள்ளையன்னை மேதினியில் பிறந்திலரேல்**
**நாமாட்சி செய்யவொரு தாயுலகம் தெரிந்திராது**
**தானாட்சி செய்தவரை தன்நினைவாழ விட்டிட்டு**
**வானாட்சிக் கேகினார் அவர்வரலாறு அறிந்திடுவோம்!**

தொல்புரத்து ஊர் பெற்ற தொல்லையிலா மைந்தன் அருணாச்சலம் அவர்களுக்கும் மூளாயூர் முத்தெனத் திகழ்ந்த நாகமுத்து (சிவக்கொழுந்து) அவர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட இல்வாழ்க்கை உறவானது இனியபல பண்புகளோடு சிறப்புற்றிருக்கும் நாளில் இவர்களுக்கு இல்வாழ்வின் இனிய செல்வங்களாக பிறந்த பிள்ளைகள் சரஸ்வதி, நாகலிங்கம், முத்துக்குமாரு, கோவிந்தம்மா, கிருஸ்ணபிள்ளை, கனகசபை, விஜயசுந்தரவல்லி, இராசலட்சுமி, அம்பலவாணர், சோதியார் ஆகியியோரோடு மூத்தர்தான் இங்கே நாம் போற்றித் துதித்து வரலாறு நோக்கும் மீனாட்சிப்பிள்ளை அம்மையார் அவர்களாவார்!

அம்மையார் மீனாட்சிப்பிள்ளையவர்கள் பெற்றோருக்கு மூத்த மகளாகப் பிறந்ததினால் அருமையும் பெருமையும் கொண்டவராக இருந்தார். சின்ன வயதிலே அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் நிரம்பியவராக வளர்ந்தார். ஆரம்பக் கல்வியை யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டார். சிறுமியாக இருக்கும் போதே உடன்பிறப்புக்கள் பத்துப் பேராக இருந்ததால் பொறுப்புக்கள் பலவற்றை ஏற்றுக்கொண்டார். சகோதரர்களுக்கு சகோதரமாகவும் மறுபுறம் தாயாராகவும் கடமைகள் செய்தார். குடும்பம் பெரிய குடும்பமாகையால் பெற்றோருக்கு உதவி புரிவதோடு சமையல் செய்வதிலும் சகோதரர்களுக்கு பணிவிடைகள் செய்வதிலும் அற்பணிப்போடு நடந்து

கொண்டார். சகோதரர்களை கல்விமான்களாக வளர்ப்பதிலும் ஒழுக்கமுள்ளவர்களாக உருவாக்குவதிலும் பெரும்பங்கு வகித்தார். பெற்றோருக்கு செல்லப்பிள்ளைகளாக இருக்க சகோதரர்கள் அம்மையார் மீனாட்சிப்பிள்ளை அவர்களுக்கு கட்டுப்பட்டவர்களாகவும் பயபக்தி உடையவர்களாகவும் வாழ்ந்து வந்தனர். இது அம்மையாரின் பெரும் புணற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தான் கல்வி கற்பதோடு பெற்றோருக்கு உதவுவதிலும் சகோதரர்களின் நலன்களைப் பேணுவதிலும் அக்கறையோடிருந்த அம்மையார் பருவமடைந்து பெண்மைக்குரிய அனைத்துப் பண்புகளோடும் திகழ்ந்தார்.

காலங்கள் உருண்டோடியது. அம்மையார் மீனாட்சிப்பிள்ளை அவர்கள் வண்ணத் தமிழ்ப் பெண்ணாக வையகத்திலே திகழ்ந்தார். பெற்றோருக்கு அம்மையார் மூத்த மகள் என்பதாலும் சின்ன வயதிலே பொறுப்புக்கள் பலவற்றைச் சுமந்து அனுபவ முதிர்ச்சி பெற்றிருந்தாலும் பெற்றோர்கள் அம்மையார் அவர்களுக்கு திருமணம் செய்துகொடுத்து இல்வாழ்க்கையிலே ஈடுபடுத்த விரும்பினார்கள். அதற்காக அவர்கள் கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அருந்ததி நாயகியின் அருமைப் புதல்வன் சேனாதிராஜா அவர்களைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொடுத்தார்கள்.

திருமணம் இறையருளால் இனிது நிறைவேற மீனாட்சிப்பிள்ளை சேனாதிராஜா தம்பதியர் ஈருயிரும் ஒருடலுமாக பார்ப்போர் வியக்கும் வண்ணம் வள்ளுவப் பெருந்தகை வகுத்த வாழ்க்கை நெறிக்குத் தகுந்தாற்போல் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தனர். அம்மையாரின் கணவனார் சேனாதிராஜா அவர்கள் யாழ்ப்பாணம் மகேந்திரா தியேட்டரில் சிலகாலம் இயக்குநராகவும் பின் யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கியில் லிகிதராகவும் பின்னர் மக்கள் வங்கியிலும் கடமையாற்றி அம்மையாருக்கு உறுதுணையாக இருக்கவே அம்மையாரும் மனைத்தக்க மாண்புடையாளாகி தற்கொண்டான் வளத்தங்காள் வாழ்க்கைத்துணை என்பதற்கிணங்க வாழ்ந்து வந்தார்.

அம்மையார் மீனாட்சிப்பிள்ளை அவர்களும் சேனாதிராஜா அவர்களும் இல்வாழ்வு சிறப்புற இனிதே வாழும்

நாளில் இனிய பிள்ளைச் செல்வங்களாக அறுவரைப் பெற்று அவனியதில் அறுகுபோல் வேரூன்றினார்.

மூத்த மகன் குலரத்தினராஜாவைப் பெற்றெருத்து அருமை பெருமையோடு வளர்த்து திலகவதியார் அவர்களைத் திருமணம் செய்துகொடுத்து மருமகளாக்கியதோடு கணரூபன், இலிங்கநேசன் ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகவும் பெற்று மகிழ்ந்தார்.

இரண்டாவது மகள் விமலா அவர்களை கல்வியில் கலையில் வல்லவராக்கி இலங்கைநாதன் அவர்களைத் திருமணம் செய்து கொடுத்து மருமகனாக்கியதோடு யதுகோபன், கோபிகா ஆகியோரை பேரப்பிள்ளைகளாகவும் கண்டு களிப்புற்றார்.

மூன்றாவது மகள் மங்களேஸ்வரி அவர்களை மங்களங்கள் பல சூட்டி வளர்த்தெடுத்து சிறிநாதன் அவர்களுக்கு திருமணம் செய்துகொடுத்து மருமகனாக்கிய தோடு சுகன்யா அவர்களைப் பேரப்பிள்ளையாகவும் கண்டு மகிழ்ந்தார்.

நான்காவது மகள் மாலினி மகளாரை மாண்புடனே பெற்றெடுத்து சிவானந்தரத்தினம் அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்து மருமகனுமாக்கி மகிழ்ந்தார்.

ஐந்தாவது மகன் சிறிதரன் அவர்களையும் சிறப்புறவே பெற்றெடுத்து சீரும் சிறப்புமுட்டி வளர்த்தெடுத்து கருணாவதி அவர்களைத் திருமணம் செய்து வைத்து மருமகளாக்கிய தோடு மீனா, மிதுஷா ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகவும் பெற்று மகிழ்ந்தார்.


ஆறாவது மகள் ஜெயந்தினி அவர்களை இனிதுறவே பெற்றெடுத்து இணையின்றி வளர்த்து குலேந்திரராஜா அவர்களை திருமணம் செய்து வைத்து மனம் நிறைந்த மருமகனாக்கியதோடு ஷாரங்கி அவர்களைப் பேரப்பிள்ளையா கவும் பெற்று மகிழ்ந்து மிகப் பெரும் ஆலவிருட்சமாக அவனியிலே கிளைபரப்பி நின்றார்.

கணவனை இழந்த பின்பும் கண்ணிய வாழ்க்கையை மேற்கொண்ட அம்மையார் மீனாட்சிப்பிள்ளை அவர்கள் தாய்

அன்பிற்கோர் எழுத்துக்காட்டாகவும் தன்னம்பிக்கை நிறைந்தவராகவும் தெய்வ நம்பிக்கை மிகுந்தவராகவும் விளங்கினார். அம்மையார் அவர்கள் தன்னால் எதையும் செய்ய முடியாது தளர்ந்திருந்த போதிலும் கதிரையிலே இருந்தவாறு கண் ஜாடையினால் உறவுகளை நெறிப்படுத்தினார். உறவுகளும் அம்மையாரின் விரல் அசைவுகளை கட்டளையாக ஏற்று கண்ணியமாக நடந்தனர்.

இந்நிலையிலே வயோதிபம் ஒருபுறம் நோய் மறுபுறம் அம்மையாரை நிலைகுலைய வைத்தது. இந்நிலையிலேயும் அடுத்தவருக்கு சிரமம் கொடுக்காத பண்போடு தானும் தன்பாடுமாக சிறிதுகாலம் படுக்கையோடு முடங்கலானார். வாழ்க்கையின் முழுமைகளை அனுபவித்து பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகளின் சீர்சிறப்புக்களையெல்லாம் கண்டுகளித்து நோய் துன்பத்தின் மத்தியிலேயும் மகிழ்ச்சியோடு இருந்த அம்மையார் மீனாட்சிப்பிள்ளை அவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு துன்புறுதல் கண்டு அம்மையாருக்கு உரிய வைத்தியம் செய்வதற்கு உறவுகள் பகீரதப் பிரயத்தனம் செய்தபோதும் உரிய பலனேதும் கிடையாது போகவே சித்திரை மாதம் ஆறாம் திகதி இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு (06.04.2006) இந்த மண்ணுலகில் மலர்ந்திருந்த மனிதருள் மாணிக்கம் மீனாட்சிப்பிள்ளை அவர்கள் உறவுகள் அனைவரையும் கண்ணீரில் நீராடவைத்து இவ்வுலகு நீத்து இறையடி சேர்ந்தார்!

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்பட்டார்"**



# அமரர் மீனாட்சிப்பிள்ளை அவர்களை மறப்போமா!

இல்வாழ்க்கைப் பயனாலே உன்னுள்ளே எமையிணைத்தாய்
அல்லும் பகலுமே அங்கங்கள் எமக்களித்தாய்
சொல்லொணாத் துன்பங்கள் சமந்துமே மக்ழ்ந்தெம்மை
மெல்ல இம்மேதினிக்கு உவந்தாய் உனை மறப்போமா!

குருதிதனை உருமாற்றிப் பாலாக்கித் தந்தாய்
பருகிநாம் கழித்திடவே பன்னீராய் நினைத்தாய்
உருகியே உடல்நொந்து போவதையும் பாராமல்
பெருகிடும் பாசத்தாலெமை அணைத்தாய் உனை மறப்போமா!

மார்பிலோர் அணிகலமாய் மகிழ்ந்தெம்மைச் சுமந்தாய்
போர்வையுமே நீயாகிப் பொழுதெல்லாம் காத்தாய்
பேர் ஒன்று வைத்தெம்மைப் பெருமையுடன் தானழைத்து
சீர்தந்து சிறப்பளித்தாய் அன்னை உனை மறப்போமா!

தவழ்ந்துநாம் வந்திடவே அமுதூட்டி மகிழ்ந்தாய்
உவந்தன்பைத் தந்துவிட்டு உள்ளத்தால் உயர்ந்தாய்
இவையன்றோ நாம் வணங்கும் தெய்வமென்று எண்ணிடவே
சிவமாகிச் சக்திதந்தாய் அன்னை உனை மறப்போமா!

மெல்லநாம் நடந்துவர செல்லமாய் அழைத்தாய்
நல்ல நல்ல கதைசொல்லி அகமகிழ வைத்தாய்
வல்லமை தந்தெமக்கு வையகத்தில் வாழ்வதற்கு
இல்லமுமாய் இடந்தந்தாய் அன்னை உனை மறப்போமோ!

மீனாட்சிப் பிள்ளையென்றோர் பேர்தாங்கிவந்தாய்
தேனாட்சி செய்திடும் இல்வாழ்வு வாழ்ந்தாய்
வானாட்சி செய்பவர்கள் வந்துன்னை அழைத்திடவோ
கானாட்சி நீ நினைத்தாய் அன்னை உனை மறப்போமோ!

அன்புடைய அன்னைக்காய்...
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், ஊர்மக்கள்

வாழ்ந்திருந்த காலத்து வளமான கதை சொல்லும்

# கண்ணீர்த் துளிகள்

## அருமைப் பிள்ளைகள்

கோயில்நாம் சென்றதில்லை தாயே நீ கோயிலன்றோ
நாவினால் அழைப்பதுவே ஆலயமணி எமக்கன்றோ
தாவிநாம் வரும்பொழுது ஆவதனைப் போல் அணைப்பீர்
கூவிநாம் குரல்கொடுத்தால் கன்றெனவே நின்றிடுவீர்
பாவியர்கள் நாமோ பலனதுவும் இவ்வளவோ
மேவியெமை நின்றமாதா மேதினியை விட்டகன்றீர்
பூவினையோ நாமெடுப்போம் பொற்பாதம் சாந்திபெற
தூவியே வணங்கிடுவோம் துயர்துடைக்க வருவீரோ!

## அன்னைக்கு அன்னையாக
## அம்மையாரை எண்ணும் மருமக்கள்

ஆவிதனில் குடிகொண்ட அன்னையாரே மாமியாரே
பூவினைப்போல் எமைக்காத்த புண்ணியத்தின் தாயாரே
நோவினையே தந்திடாமல் நெஞ்சமதில் குடியிருந்த
நாவினிக்கும் நாமத்தாய் மீனாட்சிப்பிள்ளையாரே
பாவினிக்கப் பாடியுமை பாரினிற்குப் பரிந்துரைத்து
கோவிலுக்கு சமமாக கும்பிடவே நாமிருக்க
சாவினிற்கே உமையீந்து சோகமதைத் தந்திட்டு
காவியுமைப் போக்வந்தான் காலனுடன் சென்றீரோ!

பிஞ்சுக் குழந்தைகளின்

# நெஞ்சத்துக் குரல்கள்

## பேரப்பிள்ளைகள்

நேத்துவரை ஊட்டியெமை காத்தவரே பேத்தியாரே
தோத்திரங்கள் பாடியெங்கள் துயர்துடைத்த வாத்தியாரே
சூத்திரங்கள் கொள்ளாமல் அன்னையரைப் போலெமக்கு
காத்திரங்கள் கற்பித்த வித்தகரே உத்தமரே
பூத்திருந்த மலர்போல புன்னகையும் குலுங்கிடவே
போத்திருந்த மானிடத்து உடலதனை மாய்த்திட்டு
சாத்திரங்கள் பாத்தோ நீர் சங்கரனை அடைந்திடவே
பாத்திரத்தை முடித்திட்டு பேத்தியாரே மறைந்திட்டீர்!

## உடன்பிறப்புக்களின் உள்ளத்துக் குரல்

அன்னைக்கு அன்னையாய் அருகிருந்த அக்கையாரே
என்றுமே எமக்காக வாழ்ந்திருந்த ஆருயிரே
பெண்மைக்கு இலக்கணங்கள் வகித்திட்ட பெரியவளே
அன்போடு அன்னையென நாம்மதித்த உத்தமியே
இன்னுயிரை நெய்யாக்கி உன்னுடலைத் திரியாக்கி
விண்வரையும் நெய்யாக்கி உன்னுடலைத் திரியாக்கி
விண்வரையும் ஒளிகொடுத்தே விடியரைத் தந்திட்டு
மென்மலரே மீனாட்சிப் பிள்ளையெனும் மாதரசே
பின்னவர்நாம் வருந்திடவோ பிரிந்தின்று சென்றீர்!

ஜனனிப்போம் என்று நாம் அறிந்து இருந்ததில்லை மரணிப்போம் என்பதையே ஜனனத்தில் அறிந்து கொண்டோம். ஆதலால் ஜனனத்தில் மகிழ்வதையும் மரணத்தில் அழுவதையும் விட்டுவிடுங்கள்.

## தேற்றம் கொள்வீர்

பத்தினியாய் மூளாயூர் முத்தெனவே வாழ்ந்திருந்த
உத்தமியார் மீனாட்சிப் பிள்ளையெனும் அன்னை
இத்தனைநாள் எம்மோடு வாழ்ந்திருந்து மகிழ்ந்திட்டு
செத்தனரோ என்றெண்ணிச் சுற்றத்தீர் கலங்காதீர்
மத்தள வயிறனொடு உத்தமி புதல்வனும்
கைத்தலம்பற்றியே காலமெலாம் வாழ்ந்திட
வித்தகியாம் அன்னையாரை விரைந்திங்கு வந்தழைத்து
வைத்தனர் வதிரன்புலோ என்றெண்ணித் தேறுடுவீர்!



உ

# விநாயகர் கவசம்



வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய
காசிபர் காக்க புருவந் தம்மைத்
தளர்வின் மகோதரர் காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க (1)

கவின்வளரு மதரங் கசமுகர் காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசு தர்காக்க நனிவாக்கை
விநாயகர்தாங் காக்க
அவிர்நகை துன்முகர் காக்க வள்ளெழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறதா திளங்கொடிபோல் வளர்மணி நாசியைச்
சித்திதார்த்தர் காக்க (2)

காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க
களங்கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த பூர்வசர்தா
மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாசன் காக்க
இதயந் தன்னைத்
தோமகருங் கணநாதர் காக்க வகட்டினைத்
துலங்கே ரம்பர் காக்க (3)

பக்க மிரண்டையும் தராதரர் காக்கப்
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கின கரன்காக்க விளங்கி லிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க

தக்கருய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்க கணப்பன் காக்க ஊருவை மங்கள
மூர்த்தி யுவந்து காக்க (4)

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க விருபதமேக
தந்தர் காக்க
வாழ் கரங்கிப் பிரப்பிர சாதனர் காக்க முன்கையை
வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபுரகர் காக்க விரல்பதும
வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க (5)

அக்கினியிற் சித்தீசர் காக்க வுமா புத்திரர்தென்
னாசை காக்க
மிக்கருநிருதியிற் கணேசுரர் காக்க விக்கினவர்த்
தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க வாயுவிற் கசகன்னன் னாக்க
திகழ் உதீசி
தக்கநிதிபன் காக்க வடகிழக்கி வீசாந்
தனரே காக்க (6)

ஏகாந்தர் பகன்முழுதுங் காக்க விரலுனுஞ் சந்தி
யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின கிருது காக்க விராக்கதர்பூத
முறுவே தாள
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு பாசாங் குசர்தாம்
விரைந்து காக்க (7)

மதிஞானத் தவந்தான மானமொளி புகழ்குலம் வண்
சரீரம் முற்றும்
பதிவான தனந்தானியங் கிரசு மனைவி மைந்தர்
பயினட் பாதிக்

கதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க காமர்பவுத்
திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச ரெஞ்ஞான்றும்
விரும்பிக் காக்க (8)

வென்றிசீவி தங்கபிலர் காக்க கரியாதி யெலாம்
விகடர் காக்க
என்றிவ்வா றிது தன்னைமுக் காலமு மோதிடினும்பா
லிடையூ றென்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள் யாதொருவ
ரோதி னாலும்
மன்றவாங் கவர் தேகம் பிணியறவச் சிரதேக
மாகி மன்னும் (9)

திருச்சிற்றம்பலம்

### குமரகுருபரர் அருளிய

# சகலகலாவல்லிமாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சகம் ஏழும் அழித்து
உண்டானுறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே!

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே!

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே?
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே!

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாள்
நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே!
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச்செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே!

உ



# நடராசப் பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறை நான்கின் அடி முடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும்நீ அனலும் நீ
மண்டலம் இரண்டேழும் நீ
பெண்ணும் நீ ஆணும் பல்லுயிர்க் குயிரும்நீ
பிறவியும் நீ ஒருவன் நீயே
பேதாதி பேதம் நீ பாதாதி கேசம் நீ
பெற்ற தாய் தந்தை நீயே
நண்ணுநற் பொருளும் நீ இருளும் நீ ஒளியும்
நாதனாய் வந்தவனும் நீ
நவில்கின்ற கிரகங்கள் ஒன்பதும் நீ
இந்த நாநிலம் தந்தவனும் நீ
எண்ணரிய சீவ கோடி கள்ஈன்ற அப்பனே
என்குறைகள் ஆர்க்குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எமையீன்ற
தில்லை வாழ் நடராசனே! (1)

மானாட மழுவாட மதியாடப் புனலாட
மங்கை சிவகாமியாட
மாலாட நூலாட மறையாடத் திரையாட
வனசமுறை பிரமனாட
கோனாட வானுலகு கூட்டமெல்லாமாட
குஞ்சர முகத்தானாட
குண்டலமிரண்டாடத் தண்டபுலி உடையாட
குழந்தை முருகேச னாட
தானாட ஆடு சம்பந்தர் இந்திரர் முனிவர்
தனி அட்ட பாலராட
தகு தும்பையருமாட நந்தி வாகனமாட
தாள நெறி மாதராட

யானாட வினை ஓட எனை நாடி இதுவேளை
இசை விரு தோடாடி வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எமையீன்ற
தில்லை வாழ் நடராசனே. (2)

கடலென்றா புவிமீதில் அலையென்ற உருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை ஆற்றொணா சுழலிலே
கட்டுண்டு நித்தம் நித்தம்
உடலென்ற கும்பிக்கு உணர்வென்ற இரைதேடி
ஓயாமல் இரவு பகலும்
உண்டுண்டு உறங்குவது கண்டதே யல்லாமல்
ஒரு பயன் அடைந்திலேனைத்
தடமென்ற மிடிகரையிற் பந்த பாசங்களெனும்
தாபரம் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை இவ்வண்ணமாய்
இடை நின்று தடைசெய்ய ஏனென்று கேளாது
இருப்பது உன் அழகாமோ
ஈசனே சிவகாமி நேசனே எமையீன்ற
தில்லை வாழ் நடராசனே. (3)

நொந்து வந்தேனென்று பலதரம் உரைக்கவும்
நுளையாதது என்னமதியோ
நடப்ப நெறி யறியாத பிள்ளையை பெற்றும்
அதை நோக்காத தந்தையுண்டோ
சந்ததமும் தஞ்சமென் றடியை பிடிக்கவும்
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுகன் ஆறுமுகவன் இருபிள்ளை யில்லையோ
சந்ததி இல்லாத நீயோ
விந்தை தருசாலங்கள் உன்னிடமிருக்குதே
வினையொன்று மறிகிலேனே

வேதமும் சாத்திரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை யிது வல்லவோ
இந்த உலகிரேழும் ஏனளித்தாய் சொல்லு
இனி உன்னை விடுவதில்லை
ஈசனே சிவாகமி நேசனே எமை யீன்ற
தில்லை வாழ் நடராசனே. (4)

காயா மரங்களிற் பூ பிஞ்சறுத்தனோ
கன்னியர்கள் பழி கொண்டனோ
கடனென்று பொருள் பறித்தே வயிறெரித்தனோ
கடுவழியில் முள்ளிட்டனோ
தாயருடற்குள் வரவென்ன வினை செய்தனோ
தந்த பொருளிலை என்று நான்
தான் என்ற கெர்வமொடு கொலைக்களவு செய்தனோ
தபசிகளை ஏசினேனோ
வாயார நின்று பல பொய் சொன்னனோ
வித்வாமிசரை வசை சொன்னனோ
வந்தவரை மரியாதை செய்யாதடித்தனோ
வளக்கில் ஓரம் சொன்னனோ
ஈயாத லோபியே ஆனாலும் என்பிழைகள்
எல்லாம் பொறுத்தருளுவாய்
ஈசனேசிவகாமி நேசனே எமையீன்ற
தில்லை வாழ் நடராசனே (5)

பம்பு சூனியமல்ல வைப்பல்ல மரணம்
பகர்வசிய தம்பனமல்ல
பாதாள வஞ்சினம் பரகாய பிரவேசம்
பண்பல்ல சாலமல்ல
அம்பு குண்டுகள் விலக பொழியு மந்திரமல்ல
ஆகாய குளிகை யல்ல
அன்போடு செய்கின்ற வாதமொழிகளல்ல
அரிய மோகனமுமல்ல

கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் பூலிப்பாணியும்
கோரக்கர் தன்வந்திரி போக முனி இவரெல்லாம்
கூறும் வைத்தியமல்ல
எம்பரம வுன்னடியை நீங்காது நிலைநிற்கும்
இச்சையை எனக்கருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே எமையீன்ற
தில்லைவாழ் நடராசனே. (6)

வழிகண்டு நின்னடிகள் துதியாத போதிலும்
வாஞ்சையில்லாத போதும்
வாலாயமாய் கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்த போதும்
மொழி ஏதுகை மோனை இல்லாமலே பாடினும்
மூடனேன் மூர்க்கனேனும்
மோசமே செய்யினும் தேசமே கவரினும்
முழு காமியே அயினும்
பழி எனக்கல்லவே தாய் தந்தையர் கலோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைகொளப் பாதியுடல் ஈந்தநீ
பாலனை கக்கொணாதோ
எழில் பெருகும் அண்டங்கள் இசைவாய் அமைத்தநீ
என்குறைகள் தீர்த்தலரிதோ
ஈசனே சிவகாமி நேசனே எமையீன்ற
தில்லை வாழ் நடராசனே. (7)

அன்னை தந்தையர்கள் எனை ஈன்றதற் கழவனோ
அறிவற்றதற் கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னை நெந்தழுவனோ
ஆசை மூன்றிற்கழுவனோ
முன்னிலென் வினை வந்து மூழுமென் றழுவனோ
முத்தியை நினைத் தழுவனோ

முன் பிறப்பென்ன வினை செய்தனென்றழுவனோ
மூடர் உறவுக்கழுவனோ
தன்னை நொந்தழுவனோ உன்னை நொந்தழுவனோ
தரித்திர திசைக் கழுவனோ
தாரணியில் உன்றன் அருள் பெற்ற பெரியோர்களை
தழுவாததற்கழுவனோ
இன்னம் எப்பிறவி வருமென்றழுவனோ அவைகள்
எல்லாம் உரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எமையீன்ற
தில்லைவாழ் நடராசனே (8)

தாயார் இருந்தென்ன தன்தையு மிருந்தென்ன
தன்பிறவி உறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத் தென்ன
தாரணியை ஆண்டுமென்ன
சேயர்கள் இருந்தென்ன குருவாய் திரிந்தென்ன
சீடர்கள் இருந்துமென்ன
சித்து பல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகள் எல்லாம்
ஓயாது மூழ்கினும் பயனென்ன எமனோலை
ஒன்றினைத்தான் தடுக்க
உதவுமோ இவை எல்லாம் சந்தை யுறாவென்றுதான்
உன்னிரு பதம்பிடித்தேன்
ஈயாதிருக்கத் தியாகராசாப் பெயரும் இசையுமோ
ஏன் புனைந்தாய்
ஈசனே சிவகாமி நேசனே எமையீன்றா
தில்லைவாழ் நடராசனே. (9)

இன்னமும் சொல்லவோ உன்மனம் கல்லோ
இரும்போ பெரும்பாறையோ
இரு செவியும் மந்தமோ கர்ம பலவந்தமோ
ஏழை பதுங்கினன் அல்லையோ

என் அன்னை மோகமோ யாரிட்ட சாபமோ
ஈதுனக்கழகு தானோ
இருபிள்ளை தாகமோ யார் மீது கோபமோ
இனி உன்தனை விடுவனோ
உன்னை விட்டெங்கு சென்றாலும் உய்திடுவனோ
உனை யடுத்தும் கெடுவனோ
ஓயவிதென் குற்றம் உன்குற்றம் ஒன்று மிலை
உற்றுப்பார் பெற்ற அய்யா
என்னை அழ்பவனும்நீ அடிமை நான் ஆதலால்
இனியருள் அளிக்க நினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே எமையீன்ற
தில்லைவாழ் நடராசனே. (10)

# அம்பாள் துதிப்பாடல்



அம்மா அம்மா என் தாயே
ஆறுதல் தந்தெமைக் காப்பாயே
இம்மாநிலத்தில் நீதானே
எங்கள் பெரியநாயகி தாய்தானே (அம்மா அம்மா)

இங்கே நாம்படும் வேதனைகள்
எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே
புதுமை ஒன்றைச் செய்திடம்மா (அம்மா அம்மா)

அல்லும் பகலும் அழுகுரல்கள்
எல்லாத் திசையும் வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை
புழுவாய்த் துடிக்க வைக்குதம்மா (அம்மா அம்மா)

சொல்லால் வடிக்க முடியாது
துயரம் எமக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது
தாயே எம்மைக் காப்பாற்று (அம்மா அம்மா)

ஒன்றா இரண்டா நாம் சொல்ல
உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

நின்றால் நடந்தால் உன்நினைவு
எங்கும் எதிலும் உன் காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு
துணையாய் என்றும் வந்திடம்மா (அம்மா அம்மா)

**“நற்கும் சரக்கென்று நண்ணில் - கலைஞானம்
கற்குஞ் சரக்கென்று காண்”**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சி | ட் | ச் | மீ | ள் | ளை | ப் | பி | னா |
| ப் | பி | ள் | னா | ட் | ச் | மீ | சி | ளை |
| மீ | னா | ளை | ப் | பி | சி | ள் | ட் | ச் |
| ளை | மீ | சி | ள் | ப் | பி | ச் | னா | ட் |
| ச் | ள் | ட் | ளை | மீ | னா | சி | ப் | பி |
| னா | ப் | பி | ச் | சி | ட் | ளை | மீ | ள் |
| பி | சி | ப் | ட் | ச் | ள் | னா | ளை | மீ |
| ள் | ளை | மீ | பி | னா | ப் | ட் | ச் | சி |
| ட் | ச் | னா | சி | ளை | மீ | பி | ள் | ப் |

அமரர்

**திருமதி.மீனாட்சிப்பிள்ளை சேனாதிராஜா** அவர்களின்

ஆத்மா மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகப் பெருமான்
முத்துக்குமார சுவாமிகள் பாதார விந்தங்களில் சங்கமமாகுக

வதிரன்புலோ நாயகனைப் பாடுவோம் அவன்
வாழும் மூளாய் ஊரதனைப் போற்றுவோம்
ஆவினோடு அரசில் ஆட்சி செய்பவன் அந்த
வேளமுகனை வேலனோடு வணங்குவோம்!
(வதிரன்புலோ நாயகனை...)

வேரறுக்க வினையறுக்க வந்தவன் நல்ல
ஏரறுக்க எழுந்து அருள் செய்தவன்
தேரிழுக்க பகைவிரட்டி அருளுவான் அந்த
வேளமுகனை வேலனோடு வணங்குவோம்!
(வதிரன்புலோ நாயகனை...)

ஊருக்குள்ளே உழவரோடு வந்தவன் நல்ல
நீருக்குள்ளே நீந்தி ஒளி தந்தவன்
பேருக்குள்ளே உலகினையே அடக்குவான் அந்த
வேளமுகனை வேலனோடு வணங்குவோம்!
(வதிரன்புலோ நாயகனை...)

உதிரம் சிந்தி மூத்திகரம் சொன்னவன் நல்ல
பதி உறைய வதிரன்புலோ வந்தவன்
துதிக்கரத்தை துதிப்பவற்கு நீட்டுவான் அந்த
வேளமுகனை வேலனோடு வணங்குவோம்!
(வதிரன்புலோ நாயகனை...)

பெருங்குளத்து கரையினோடு அமர்ந்தவன் நல்ல
கருநிறத்து கண்ணன் தந்த மருமகன்
வருந்துவோற்கு அருந்துணையாய் இருப்பவன் அந்த
வேளமுகனை வேலனோடு வணங்குவோம்!
(வதிரன்புலோ நாயகனை...)

# வம்சாவழி

| வில்வராய முதலி வழித்தோன்றல் | வெற்றிவேலாயுதமுதலி வழித்தோன்றல் | மானாமுதலி வழித்தோன்றல் | இராசரத்தினமுதலி வழித்தோன்றல் |
|---|---|---|---|
| ⇩ | ⇩ | ⇩ | ⇩ |
| வேலுப்பிள்ளை | அருந்ததிநாயகி | அருணாசலம் | நாகமுத்து |

வேலுப்பிள்ளை + அருந்ததிநாயகி ⇩ **சேனாதிராஜா**

அருணாசலம் + நாகமுத்து ⇩ **மீனாட்சிப்பிள்ளை**

சேனாதிராஜா + மீனாட்சிப்பிள்ளை ⇩

| குலரத்தினராசா | விமலா | மங்களேஸ்வரி | மாலினி | சிறிதரன் | ஜெயந்தினி |
|---|---|---|---|---|---|
| + | + | + | + | + | + |
| திலகவதி | இலங்கைநாதன் | சிறீநாதன் | சிவானந்தரத்தினம் | கருணாவதி | குலேந்திரராசா |
| ▼ | ▼ | ▼ | | ▼ | ▼ |
| கணரூபன் | யதுகோபன் | சுகன்யா | | மீனா | ஷாரங்கி |
| லிங்கநேசன் | கோபிகா | | | மிதுஷா | |

"என்நன்றி கொன்றாற்கும் உய்வுண்டாம்-உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"



# நன்றி நவில்கின்றோம்

எமது அன்பிற்கு பாத்திரமான குடும்பத் தலைவி திருமதி. மீனாட்சிப்பிள்ளை சேனாதிராஜா அவர்கள் இவ்வுலகிலே வாழ்ந்தபோது அவரோடு உறவு கொண்டாடி மகிழ்ந்தவர்களுக்கும் அவர் நோய்வாய்ப் பட்டிருந்த போது அவரைப் பார்வையிட்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் அவர் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஓடிவந்து உதவியவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியவர் களுக்கும் மரணச் சடங்கிலே கலந்துகொண்டு அனுதாபங்கள், கண்ணீர் அஞ்சலிகள் செலுத்தியவர் களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குகொண்டு மயானம் வரை வந்தவர்களுக்கும் இன்றைய அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்தித்து உதவியவர்களுக்கும் எமது காலத்தால் அழியாத நன்றியையும் கடமைப்பாட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

டச்சு றோட், மூளாய் கிழக்கு,
சுழிபுரம்.
06.05.2006

இங்ஙனம்,
குடும்பத்தினர்




சரணியா ஓவ் (f) செற் பிறின்ரேஸ், காசிப்பிள்ளை கட்டிடம், சங்கானை.